*International Multidisciplinary Innovative Research Journal*
*An International refereed e-journal*

**ISSN: 2456 - 4613**
**Volume - III (2)**
**April 2019**

# கம்பனின் சமய எல்லை மீறல் (அ) வெறி

**ஆனந்தி. ஆ**
உதவிப் பேராசிரியர், முதுகலை தமிழ்த்துறை,
வே.வ.வன்னியப் பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்.
தமிழ்நாடு, இந்தியா.

Corresponding author: ananthiandavar@gmail.com

வால்மீகி எழுதிய இராமாயணத்தில் இராமன் மனிதன். கம்பனின் இராமனோ கடவுளின் அவதாரம். தனக்குப் பிடித்த, தான் சார்ந்த, தான் போற்றிக் கொண்டாடிய கடவுளான திருமாலின் புகழ் பாடுவதே கம்பனின் நோக்கம் என்பதை இராமாயணம் உணர்த்தும். கம்பனின் நோக்கத்தில் தவறில்லைதான். ஆனால் வைணவத்திற்கு ஈடான பெரிய மதமான, பலராலும் பின்பற்றப்பட்ட மதமான சைவ மதத்தைத் தாழ்த்தும் வகையில், அம் மதக் கடவுளான சிவனைப் பல இடங்களில் தேவையின்றிப் படைத்து, திருமாலுக்கு அடங்கியவன் சிவன் என்பதாகக் காட்டியுள்ளமை கம்பர் கால சமய நிலையை அவரின் சமய வெறியைக் காட்டுவதாகவே உள்ளது. சமய வெறி என்று கூறுவது சற்று அநாகரீகமாகவும் சமய எல்லை மீறல் என்பது சற்று நாகரீகமாகவும் காணப்படலாம். எனினும் உற்று நோக்கின் உணர்த்தும் பொருள் ஒன்றே என்பதையும் நூலிழை அளவே வேறுபாடு என்பதையும் உணரலாம். இக்கட்டுரையில் பால காண்டம் மட்டும் ஆய்வுக்கு எடுத்தாளப்பட்டுள்ளது.

## கம்பனின் கடவுள் வாழ்த்து

வைணவக் கடவுளான திருமாலின் அவதாரமான இராமனைக் கம்பர் புகழ்ந்து பாடியுள்ள தன்மையே கம்பர் ‘வைணவர்’ என்பதைத் தெளிவுற உணர்த்தும். இராமன் மீது அளவுகடந்த பற்றுக் கொண்டவர் எனினும் இராமாயண நூலின் பாயிரத்தில் அவர் பாடும் கடவுள் வாழ்த்து,

“உலகம் யாவையும் தாம் உளவாக்கலும்
நிலைபெறுத்தலும், நீக்கலும், நீங்கலா
அலகிலா விளையாட்டு உடையார்- அவர்
தலைவர்;அன்னவர்க்கே சரண் நாங்களே”

எனச் சமயப் பொதுமை பகர்வதாகவே உள்ளது. இப்பாட்டின் பொருள், 'எல்லா உலகங்களையும் தாமே படைத்தலும், பாதுகாத்தலும், அழித்தலும் ஆகிய மூன்று தொழில்களையும் நீங்காத முடிவு இல்லாத விளையாட்டுகளாக உடையவராகிய அவரே இவ்வுலகங்களுக்கு எல்லாம் தலைவர், அத்தன்மை பெற்ற இறைவர்க்கே நாங்கள் அடைக்கலம்' என்பதாகும். இப்பாட்டில் குறிப்பிட்டு எந்தவொரு கடவுளும் சுட்டப்படவில்லை.

இதனைத் தொடரும் இரண்டு மற்றும் மூன்றாவது பாடலும் பொதுமைத் தன்மையோடு கடவுட் பெயர் எதுவும் குறிப்பிடாதவனாய் உள்ளன.

இவற்றை நோக்கும் போது வைணவ சமயம் சார்ந்தவராய் இருப்பினும் 'சமயப் பொதுமை கொண்ட சான்றோன்' எனக் கம்பனைப் புகழலாம். நிற்க. அவ்வாறு நாம் எண்ணினால் வெளித்தோற்றத்தை மட்டும் கண்டு ஒருவனை எடை போடுதல் எத்துணை தவறாகுமோ அதுவே இங்கும் நேரிடும். படைப்பின் உள் காணும் சொல் பயன்பாட்டை, நிகழ்வுகளை ஆராயின் கம்பனின் சமய எல்லை மீறலை, பாடல் வழி நிகழ்த்தியுள்ள சமயக் கலகத்தை, தராசில் நிறுத்திப் பார்க்கவே நடுநிலை நெஞ்சம் எண்ணும்.

## சமயங்களும் கடவுளரும்

தமிழரின் வரலாற்றை இலக்கியங்கள் மற்றும் பிற சான்றுகள் வழி நோக்குமிடத்து சங்க காலத்தில் நிலம் சார்ந்த கடவுளரே மக்களால் வழிபடப்பட்டு வந்துள்ளனர். சங்கம் மருவிய காலத்தில் சமண இலக்கிய ஆளுமை காணப்படுகின்றதே அன்றி பிற சமயத் தாழ்வுகள் அதிகம் இல்லை. தொடரும் பக்தி இலக்கியக் காலமோ சமயச் சண்டை மிகுந்ததாய் உள்ளது. மிகப் பெரும் சமயங்களாகத் தன்னை நிலைநாட்டியிருந்த சைவமும் வைணவமும், சமண, பௌத்த சமயங்களை வெறுத்தன. செவி வழிச் செய்திகளும் இலக்கியச் சான்றுகளும் இதனை மெய்ப்பிக்கின்றன.

சைவர்களும், வைணவர்களும் வெளிப்படையாக மிகப்பெரிய அளவில் சண்டையிட்டுக் கொள்ளவில்லை எனினும் அவர்களிடையே நிலவி வந்த 'சமயக் காழ்ப்பை' அவ்விரு சமயம் சார்ந்த இலக்கியங்களை நுணுகி ஆராய்வதன் வழி அறியலாம். அவ்வகையில் வைணவக் கடவுளான திருமாலின் பெருமை போற்றும் இராமாயணத்தில், சைவக் கடவுளான சிவன் கம்பரால் திட்டமிட்டு தாழ்த்தப்பட்டுள்ளதை கம்பராமாயணப் பாடல்களே நன்குணர்த்துவனவாய் உள்ளன.

**கம்பன் கட்டமைக்கும் சிவன்**

கதையின் தொடக்கத்தில் அரக்கர்களால் தாங்கள் படும் துன்பத்தைத் தீர்க்குமாறு தேவர்கள் சிவனிடம் முறையிடுகின்றனர். அப்போது,

“படு பொருள் உணர்ந்த அப்பரமன்,

யான் இனி

அடுகிலேன்…………..” (186)

என மறுத்ததாக எழுதுகிறார் கம்பர்.

இதற்கு, ‘படுபொருள் என்றது அரக்கர் இனி இன்னாரால் அழிக்கப்படுவார்கள்’ என்ற அவ்உண்மையை அறிந்தமையால், தான் அடுகிலேன் என்றான்” என்று உரை எழுதுகிறார் அ.ச.ஞானசமபந்தன் இக்கூற்று ஆய்வுக்குரியது. திருமாலால்தான் இராவணன் அழிக்கப்படுவான் என்பதை உணர்ந்து சிவன் கூறியிருந்தால் ‘யான் அடுகிலேன்’ என்று மட்டுமே கூறியிருப்பார். ‘இனி’ என்ற சொல் ‘ஏற்கனவே நான் போரிட்டு பார்த்துவிட்டேன். என்னால் முடியாது. இனி நான் போரிட மாட்டேன்’ என்ற பொருளைத் தருவதாகவே உள்ளது.

இதற்கு வை.மு.கோ, ‘இராவணன் தன் தலையை அறுத்து ஓமம் செய்தபோது தேவர் முதலியோரால் அறுக்க முடியாமை முதலிய வரங்களைச் சிவன் தானே தந்ததனால்தான் முன் செய்த பிழையைக் கூறிக் காக்க வேண்டுமென்று தனியே கூறலாயினனென்’ என்று விளக்கம் தருகிறார். இங்கும் சிவன் பிழை புரிந்தவராகவே கூறப்படுகிறார்.

மொத்தத்தில் கம்பனின் சொல்லாட்சியும் உரையாசிரியர்களின் பொருட்திறமும் சிவன் திருமாலுக்குக் கீழ் என்று எடுத்துரைக்கும் வண்ணமே அமைந்துள்ளன.

சிவனை, ‘இனி அடுகிலேன்’ என்று சொல்ல வைத்ததோடு அல்லாமல், பிரம்மனின் யோசனையைக் கேட்க தேவர்களோடு செல்ல வைத்து,

“சுடர்மணி மண்டபம் துன்னி, நான்முகக்
கடவுளை அடி தொழுது, அமர கண்டகர்
இடிநிகர் வினையம் அது இயம்பினான்”

என பிரமனின் காலடியில் விழ வைக்கவும் செய்துள்ளார் கம்பர்.

தேவார மூவர்களாலும், நாயன்மார்களாலும் போற்றிப் புகழப்பட்ட கடவுளான சிவனை, எந்தவொரு சமயத்திற்கும் தலைமைக் கடவுளாகக் காணப்படாத, பூமியில் மக்களால் அதிகம் வணங்கப்படாத பிரம்மனின் காலில் விழச் செய்கிறார் கம்பன். ஒருவேளை பிரம்மன் திருமால் வயிற்றுப் பிறந்தவன் என்பதாலோ என்னவோ.

பிரம்மனிடத்து சிவன் வேண்டும் போது அங்கு திருமால் தோன்றுகிறார். அப்போது அனைவரும் திருமாலின் அடியில் வீழ்ந்து தொழுது மகிழ்ச்சியால் ஆடுகின்றனர். அவர்களுள் பிரம்மனும் சிவனும் அடக்கம்.

"எழுந்தனர் - கறைமிடற்று இறையும், தாமரைச்
செழுந்தவிசு உவந்த அத்தேவும் - சென்று, எதிர்
விழுந்தனர்அடிமிசை, விண்ணுளோரொடும்
தொழும்தொறும், தொழும்தொறும், களி துளங்குவார்" (192)

இவ்வாறு அடிதொழுது மகிழ்ச்சி கொண்டது மட்டுமில்லாது அவர்கள் அனைவரும் திருமாலைக் கண்ட மகிழ்வில் வியப்புடன் இருந்த நிலையினை,

"விதியொடுமுனிவரும்,விண்ணுளோர்களும்
மதிவளர் சடைமுடி முழுவலாளனும்
அதிசயமுடன் உவந்து, அயல் இருந்துழி
கொதி கொள்வேல் அரக்கர்தம் கொடுமை கூறினார்" (195)

என்று எழுதுகிறார் கம்பர். பன்னெடுங்காலமாக மிகப் பெரும் சமயமாக நிலைபெற்றிருக்கும் சைவ சமயத்தின் தலைமைக் கடவுளான சிவனை பிரமன், திருமால் கால்களில் விழ வைத்தும், சிவன் திருமாலை வியந்து பார்ப்பதாகவும் படைத்திருப்பது, திருமால் தன்னை விடப் பெரியவன், ஆற்றலுடையவன் என்பதைச் சிவனே ஒப்புக்கொண்டதாகக் காட்டுவதற்கும், சைவத்தை விட வைணவம் பெரியது என்பதை எடுத்துரைப்பதற்கும் சமமாகும்.

திருமால் இராவணனைத் தான் அழிப்பதாகக் கூறி, அங்கிருந்தோர் அனைவரும் தன்னோடு என்னவாகப் பிறக்க வேண்டும் என்று சொல்லிச் சென்ற பின்,

"தூய மாமலர் உள்ளோனும் சுடர்மதி சூடினோனும்
சேயுயர் விசும்புளோருந் தீர்ந்ததுஎம் சிறுமையென்றார்" (203)

என்று மகிழ்ச்சிக் கூத்தாடினர். இங்கு, 'எமது தாழ்வு தீர்ந்தது' என்று மகிழ்ந்தவர்களுள் சிவனையும் ஒருவனாகக் கம்பர் படைத்துள்ளார்.

திருமால் சொன்ன மறைப்படி அனைவரும் பூமியில் “வானரர் ஆகி”(207) வர, அவர்களுள் சிவன் வாயுகுமாரனின் மகன் அனுமனாகப் பிறப்பதாகக் காட்டுகிறார்.

“...... புராரி, மற்றுயானே வாத சேய் எனப்புகன்றான்............ “ (206)

என்பதன் வழி, சிவனே அனும அவதாரம் என்பதை அறியலாம். இராமாயணக் கதையின் வழி சிவனின் அவதாரமான அனுமன் இராமனின் பாதம் பணிந்தவனாக, இராமனின் கட்டளைகளை நிறைவேற்றுபவனாக, இராமனைக் கடவுளாகக் காணும் பக்தனாக, இராமனின் தூதுவனாக, இராமனின் போர்ப் படைகளுள் ஒருவனாகக் கம்பரால் கட்டமைக்கப்பட்டுள்ளதை உணரலாம்.

## சிவதனுசுவும் கம்பனும்

இராமன் சிவதனுசு எனப்படும் வில்லை ஒடித்தே சீதையை மணந்தார் என்கிறது காப்பியம். இராமன் ஈடு இணையற்ற வீரன் என்பதற்கு இதுவொரு சான்று. ஆனால் நுணுகிப் பார்க்குமிடத்து அவ்வில் யாருடைய வில்? அது ஏன் வளைக்கப்பட வேண்டும்? வளைக்கப்பட வேண்டிய வில் உடைக்கப்பட்டது ஏன்? என்ற கேள்விகளை நாம் ஆராய வேண்டியதாகிறது.

இராமன் உடைத்த வில் சிவனின் வில். உமையை இகழ்ந்த தக்கனை அழிக்க மேருமலையை வளைத்துச் சிவனால் உருவாக்கப்பட்ட வில். அந்த வில்லை வளைத்து நாண் ஏற்றுபவனுக்கே சீதை என்பது விதி.

“... ... இன்று ஏற்றின், இச் சிலை

மங்கை தன் திருமணம் வாழுமால், என்பார்” (670)

“புலித் தானை, களிற்று உரிவை

போர்வையான்வரி சிலையை

வலித்தானே மங்கை திரு மணத்தான் என்று யாம் வலித்தோம்” (685)

எனும் கம்பனின் செய்யுள் அடிகளே, ‘வில்லை வளைக்க வேண்டும்’ என்பதை உறுதிப்படுத்துகின்றன. ஆனால் இராமனோ வில்லை வளைத்தது மட்டுமல்லாது உடைக்கின்றான்.

இராமனின் இச்செயல் விதியை மீறுவது. இந்த விதிமீறலை இராமன் நிகழ்த்தும் முன்னரே கம்பன் தன் கூற்றால் நிகழ்த்தி விடுகிறான். இராமன் வில்லை எடுக்கக் காலை முன் வைக்கும்போதே,

"அழிந்தது, வில்என, விண்ணவர் ஆர்த்தார்" (774)

என்கிறான் கம்பன். ஆக, சிவ வில்லை வளைப்பதை விட அழித்தலே கம்பனின் நோக்கமாக, ஏக்கமாக இருந்திருக்க வேண்டும். ஆகவேதான்,

"கடுப்பினில் யாரும் அறிந்திலர்; கையால்
எடுத்தது கண்டனர்; இற்றது கேட்டார்" (782)

என இராமனைக் கொண்டு நொடிக்கும் குறைவான நேரத்தில் வில்லை உடைக்கின்றார். சிவ வில்லை அழிப்பது, உடைப்பது என்பது சைவ மதத்தை அழிப்பது, தகர்ப்பது என்பதன் குறியீடாகவே எண்ணத் தோன்றுகிறது. வெறுமனே யாராலும் வளைக்க முடியாத, உடைக்க முடியாத வில்லாக மட்டுமே கூறப்பட்டிருக்கலாம். அதை விடுத்து சிவனால் உருவாக்கப்பட்ட சிவதனுசு என்று குறிப்பிட்டு, அதை வளைக்க வேண்டும் என்ற விதியை மீறி வைணவக் கடவுளான இராமனைக் கொண்டு அதனை உடைப்பது இங்கு ஆய்வுக்குரியதே.

## தொகுப்புரை

சைவ மதக் கடவுளான சிவனின் ஆற்றலின் அடையாளமான வில்லை உடைப்பதும், சிவனைக் குரங்காகப் பிறக்க வைப்பதும், வைணவக் கடவுளான இராமனைத் தொழுது பணிய வைப்பதும் கம்பர் சைவ மதத்தின் மீது கொண்டுள்ள காழ்ப்பையும், அவர் படைப்பு வழி நிகழ்த்தியிருக்கும் சமயக் கலகத்தையுமே காட்டுகிறது. நூல் முழுவதும் நுணுகி ஆராயின் கம்பனின் சமய நிலைப்பாடு எத்தகையதென்பதையும் அதில் சார்புத்தன்மை இருப்பதனையும் நன்கு அறிய இயலும்.

## குறிப்புதவி நூல்

கம்பராமாயணம் (பாலகாண்டம்),
வை.மு.கோபாலகிருஷ்ணமாச்சாரியார்(உ.ஆ),
உமா பதிப்பகம், மு.ப. 2006,
சென்னை-1.